செ.வெ.எண்:01 நாள்:01.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தின் முதல் நாள் நிகழ்ச்சியாக பொதுமக்கள், வணிகர்களுக்கு கொரோனா தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களையும் மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் பொதுமக்கள் வர்த்தகர்கள் மற்றும் அலுவலர்கள் கொரோனா நோய் தடுப்பு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.**

நாகப்பட்டினம் நகராட்சிக்கு உட்பட்ட பெரிய கடைவீதியில் பொதுமக்கள், வாகன ஓட்டிகள், மற்றும் அனைத்து கடைகளிலும் கொரோனா விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரங்களையும், பொதுமக்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கியும், பேருந்து நிலையத்தில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு வாரத்தின் முதல் நாள் நிகழ்ச்சியாக நகராட்சி சார்பில் பொதுமக்கள் வணிகர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் கொரோனா தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது...

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி கொரோனா நோய் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 01.08.2021 முதல் 07.08.2021 வரை நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. அதன்படி ஒவ்வொரு நாட்களும் கொரோனா நோய் தடுப்பு வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்குதல், கையேடுகள் வழங்குதல், பொதுமகள் கூடும் இடங்களில் விளம்பரப் பணிகளை மேற்கொள்ளுதல், மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளும் கொரோனா விழிப்புணர்வு குறித்த சுவரொட்டிகள் தயார் செய்யும் போட்டி, ஓவியப்போட்டி, சிறந்த வாசகங்கள், மீம்ஸ் தயாரித்தல் போட்டி ஆகியவைகள் நடைபெற உள்ளது.

பல்வேறு முயற்சிகள் மூலம் கொரோனா முதல் அலை, இரண்டாவது அலை கடந்து வந்துள்ளோம். எனவே கொரோனா மூன்றாவது அலை வராத வகையில் நாம் அனைவரும் கொரோனா நோய் தடுப்பு வழிமுறைகளை பின்பற்றிட வேண்டும். அதன்படி முகக்கவசம் அணிதல், கைகளை கிருமிநாசினி கொண்டு அடிக்கடி சுத்தப்படுத்துதல், சமூக இடைவெளி பின்பற்றுதல் போன்றவைகளை கடைபிடிக்க வேண்டும். கொரோனா நோயானது பெரியவர்கள், சிறியவர்கள் என அனைவருக்கும் வரும் நோயாகும். அரசின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

சிக்கல் கடைவீதியில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியை தொடங்கி வைத்து பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள், வணிகர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் திரு.இ.ரா.மணிவேலன், நகராட்சி ஆணையர் திருமதி ஸ்ரீதேவி, நகராட்சி பொறியாளர் திரு.வசந்தன், சுகாதார அலுவலர் டாக்டர் கண்ணன், வட்டாட்சியர் ஜெயபால் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**